# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 48 /2022 நாள் 16 .02.2022

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல், 2022**

**தேர்தல் நடத்தை விதிகளின்படி, பொது இடங்களில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான பதாகைகள், கொடிகள், சின்னங்கள் வரைதல் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டுவது ஆகியவை அனுமதிக்கப்படக்கூடாது. நீதி போராணை மனு எண். W.P.No. 3223/2022 மீதான மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு நாள் 16.02.2022 நடைமுறைப்படுத்துதல்.**

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகள் என மொத்தம் 648 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெற்றிட தேர்தல் நடத்தை விதிகளின்படி, பொது இடங்களில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான பதாகைகள், கொடிகள், சின்னங்கள் வரைதல் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டுவது தொடர்பான வரையறைகளை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

தற்போது, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றி பின்வரும் வரையறைகளை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது.

- எந்த ஒரு அரசு வளாகத்திலும் (கட்டிடங்கள் உட்பட) சுவர் எழுத்துக்கள், சுவரொட்டிகளை/தாள்களை ஒட்டுதல் அல்லது வேறு விதங்களில் உருக்குலைத்தல் அல்லது கட்-அவுட்கள், விளம்பர பலகைகள், பதாகைகள், கொடிகள் முதலியவற்றை வைத்தல்/காட்சிப்படுத்துதல் ஆகியவை அனுமதிக்கப்படக்கூடாது.

- தமிழ்நாடு திறந்தவெளிகள் (உருக்குலைப்புத் தடுப்பு) சட்டம், 1959 -ல் பார்வையில்படும் பொது இடங்கள் என்பது, ஒரு பொது இடத்தில் இருக்கும் அல்லது கடந்து செல்லும் ஒரு நபரின் பார்வையில்படும் தனியார் இடம்/கட்டிடம் அடங்கும்.

- இத்தகைய இடங்களில் உரிமையாளரின் அனுமதியிருந்தாலும், சுவரில் எழுதுவதோ, சுவரொட்டி போன்றவற்றை ஒட்டுவதோ கூடாது.

- ஓர் இடத்தின் உரிமையாளரின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் எந்த சூழ்நிலையிலும் சுவரில் எழுதுவதோ அல்லது சுவரொட்டி ஒட்டுவதோ கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்திற்கு புறம்பாக அரசு / தனியார் / பொது மற்றும் திறந்த வெளியிடங்களில் சுவரொட்டிகளை ஒட்டும் வேட்பாளர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை காவல்துறையினரால் மேற்கொள்ளப்படும். மேலும், மேற்காணும் வரையறைகளை மீறும் வேட்பாளர்கள் சுவரொட்டிகளை நீக்குவதற்கு ஆகும் செலவினத்தையும் கட்ட நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி சென்னை மாநகரம் முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக ஒட்டப்பட்டுள்ள அனைத்து சுவரொட்டிகளையும் உடனே அகற்றிடுமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையர் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

16/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்